

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 நவம்பர் 09, 2017 புரட்சி 16 முழக்கம் 43 விலை: ரூ.3.00

# வேத பார்ப்பனியம் கட்டமைத்த ‘தேவதாசி’ முறை தொடரும் அவலம்

பெண்களை கோயில்களுக்கு அர்ப்பணிக்கும் தேவதாசி முறை இப்போதும் நீடிக்கிறது. இளம் பெண்களை கோயில்களுக்கு காணிக்கையாக்கி அவர்கள் இறுதி வரை திருமணம் செய்து கொள்ளாமல் அர்ச்சகர்கள், கோயிலுக்கு உரிமையாளர்களால் பாலியல் தேவைக்குப் பயன்படுத்தும் சமூகக் கொடுமையை பார்ப்பனியம் மதச் சடங்காக சமூகத்தில் திணித்திருந்தது. நீதிக்கட்சி ஆட்சி காலத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இந்த இழிவை ஒழிக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். அவர் மேலவை உறுப்பினரானபோது இந்த இழிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தார். பெரியார், முத்துலட்சுமியின் முயற்சிக்கு தீவிர ஆதரவு அளித்தார்.

இந்த மசோதா விவாதத்துக்கு வந்தபோது காங்கிரசிலிருந்த சத்தியமூர்த்தி போன்ற பார்ப்பனர்கள், இந்துமத சடங்குகளில் அரசு குறிக்கிடக் கூடாது என்று கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இப்படி ‘தேவதாசி’களாக்கப்படுகிறவர்கள், ‘தேவதாசி’ குடும்பப் பெண்களாகவே இருந்தனர்.

சட்டத்தால் தடை செய்யப்பட்ட பிறகும் பெண்கள் மீது சுமத்தப்பட்ட இந்த கொடுமை ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டில் திருவள்ளூர் போன்ற மாவட்டங்களிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் இரண்டு மாநில அரசுகளிடமும் விளக்க அறிக்கை கேட்டிருக்கிறது.

மாத்தம்மா கோயிலுக்கு சிறுமிகள் காணிக்கை யாக்கப்படுகிறார்கள். அதற்கான சடங்குகள் முடிந்தவுடன் 5 ஆண் சிறுவர்கள் சிறுமியின் ஆடைகளை அகற்றி நிர்வாணமாக்குகிறார்கள். அப்போது மணப்பெண் கோலத்தில் சிறுமிகள் அலங்கரிக்கப்படுகிறார்கள். பிறகு மாத்தம்மாவுக்கு காணிக்கை யாக்கப்பட்டவுடன் இந்த சிறுமிகள் பொதுச் சொத்தாக்கப்பட்டு விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்று மனித உரிமை ஆணையம் தனது அறிக்கையில் கூறியிருக்கிறது.

ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் 22 மண்டலங்களில் இந்த முறை இப்போதும் தொடருகிறது. இதிலிருந்து விடுபட நினைத்தாலும் கிராமத்திலுள்ள இளைஞர்கள் அவர்களை மிரட்டி கட்டாயப்படுத்தி இந்தத் தொழிலில் நீடிக்கச் செய்கிறார்கள் என்றும் மனித உரிமை ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது. ஒரு காலத்தில் தேவதாசி குலப் பெண்கள் இப்படித் தள்ளப்பட்டாலும் இப்போது ‘தலித்’ பெண்களே இப்படி காணிக்கையாக்கப்படுகின்றனர்.

இப்படி காணிக்கையாக்கப்பட்ட சிறுமிகள் வளர்ந்து பெரியவர்களாக நோய் வாய்ப்பட்டவர்களாக மாறிவிட்டனர். கோயில் வாசலில்தான் அவர்கள் உறங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று இவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்க செயல்பட்டு வரும் ‘கைவிடப்பட்ட கிராமப் பெண்களின் அன்னையர் அமைப்பு’ கூறுகிறது.

மும்பைப் போன்ற நகரங்களுக்கு விபச்சாரத் தொழிலுக்கு விற்கப்படுகிறார்கள் என்றும் 2017ஆம் ஆண்டிலிருந்து சித்தூர் மாவட்டத்தில் மட்டும் 7 பெண்கள் ‘எய்ட்ஸ்’ நோய் பாதிப்புக்குள்ளாகி மரணமடைந்து விட்டனர் என்றும், அந்த அமைப்பினர் கூறுகிறார்கள். சித்தூர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான ‘மாத்தம்மா’க்கள் இருக்கிறார்கள். இவர்களில் 363 பேர் பெண் குழந்தைகள் அவர்கள் 4லிருந்து 15 வயதுக்கு உட்பட்டவர்கள் தடைச் சட்டம் இருந்தாலும் இந்த மதப்பழக்கம் நம்பிக்கைக் காரணமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. ‘பெண்கள் அர்ப்பணிப்பு சட்டம்’ என்ற தேவதாசி முறையை தடை செய்யும் சட்டம் செயல்படாத சட்டமாகவே இருக்கிறது. சட்டத்துக்கான விதிமுறைகள் 2016இல்தான் உருவாக்கப்பட்டன. இந்த சட்டத்தின் கீழ் இதுவரை 2 பேர் மீது மட்டுமே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சித்தூர் மாவட்டம் புத்தூரில் உள்ள குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட அதிகாரிகள் இது பற்றிக் கூறுகையில் பாதிக்கப்பட்ட பெண்களும் கிராமத்து மக்களும் சட்டத்தை அமுல்படுத்த ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அவர்கள் தேவதாசி முறைக்கு ஆதரவாக மத ‘நம்பிக்கை’ காரணமாக ஆதரவாகவே இருக்கிறார்கள். எவ்வளவு ‘மாத்தம்மா’க்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரங்கள் எடுக்கப்படவில்லை. இவர்களின் மறு வாழ்வுக்கான ஆக்கப்பூர்வ திட்டங்களும் அரசிடம் இல்லை என்று கூறுகிறார்கள். ஆந்திர மக்களிடம் ஊறிப்போய் நிற்கிற மத உணர்வு, இந்தக் கொடுமைகளுக்கு ஆதரவாக இருக்கிறது. எனவே சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மக்கள் உணர்வுகளுக்கு எதிராக செயல்பட விரும்பாமல் ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 2 முதல் 6ஆம் தேதி வரை கிராம மக்களே ‘மாத்தம்மா’ திருவிழா நடத்துகிறார்கள். 5ஆவது நாள் ‘மாத்தம்மா’ எனும் கோயிலுக்கு பெண்களை காணிக்கையாக்கும் முறையை காலங்காலமாக தொடர்ந்துவரும் புனிதமான வழக்கம் என்பதை இளைய தலைமுறையிடம் கிராமத்து முதியவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ஒரு சிறுமி ‘ரேணுகாதேவி’ வேடமிட்டு நடிப்பாள். 4 சிறுவர்கள் அந்தப் பெண்ணிடம் திருட வருவதாக நடித்து இறுதியில் சிறுமியின் ஆடைகளைக் களைவார்கள் என்று கிராமத்து மக்கள் கூறுகிறார்கள். மக்களிடம் இதை எதிர்த்துப் போராடவோ விழிப்புணர்வு ஏற்படுத்தவோ இயக்கங்கள் ஏதும் ஆந்திராவில் இல்லை என்பதே இதற்குக் காரணம். ‘தி இந்து’ ஆங்கில நாளேடு (ஆக.8) இந்தசெய்திகளை வெளியிட்டுள்ளது.

## இரயில்வே துறையை தனியார் மயமாக்க சதி!

இரயில்வே துறையை மத்திய அரசாங்கம் படிப்படியாகத் தனியாருக்குத் தாரை வார்த்திட நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. இதனைக் கண்டிக்கின்றோம். தனியாருக்குத் தாரை வார்க்கும் செயல்களை மத்தியஅரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும், சிஐடியு அகில இந்திய பொதுச் செயலாளருமான தபன் சென் கூறினார்.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை எழுப்பும் நேரத்தில் தபன் சென் பேசியதாவது:

‘‘இந்தியாவின் பிரதானப் போக்குவரத்து அமைப்பாகச் செயல்படும் ரயில்வே துறையை கொஞ்சம் கொஞ்சமாக முழுமையாகத் தனியாரிடம் தாரை வார்த்திட அரசாங்கம்எடுத்துவரும் நாசகாரக் கொள்கைகளுக்கு எதிராக என்னுடைய எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறேன். ரயில்வேயில் துப்புரவுப் பணிகள், உணவு வழங்கும் பணிகள், நிர்வாகப் பணிகள் முதலானவை - அவுட்சோர்சிங் மூலமாகத் தனியாரிடம் தரப்பட்டு விட்டன.

ஒவ்வோராண்டும் 150 இரயில் என்ஜின்கள் (லோகோமோடிவ்ஸ்) வாங்குவதற்கான உத்தரவாதத்துடன் அமெரிக்க நிறுவனமானஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்துடனும், பிரான்ஸ் நிறுவனமான அல்ஸ்டாம் நிறுவனத்துடனும் ஒப்பந்தத்தினை மத்திய அரசு செய்திருப்பதன்மூலம், இந்தியாவில் சித்தரஞ்சனிலும், வாரணாசியிலும் செயல்பட்டு வரும் ரயில் எஞ்சின் உற்பத்திப்பிரிவுகளையும், மற்றும் ‘பெல்’நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள கொள்திறனையும் மூடுவதற்கு வழிசெய்து தந்திருக்கிறது. ரயில் பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கும் ஆர்டர்களை அளித்திருக்கிறது. அதன்மூலம் நம் நாட்டிலுள்ள ரயில் பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மூடுவிழா காண நடவடிக்கை எடுத்திருக்கிறது. அடுத்ததாக, நாட்டில் உள்ள 407ரயில் நிலையங்களையும் தனியாரிடம் ஒப்படைத்திட இருக்கின்றனர்.

பல்வேறு மெட்ரோ நகரங்களில் உள்ள 23 ரயில் நிலையங்கள் ஏற்கெனவே இதற்காக இறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன. டெண்டர்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. டெண்டரில் உள்ள நிபந்தனைகளின்படி இவ்வாறு தனியாரிடம் ஒப்படைக்கும் ரயில் நிலையங்களில் பணியிலுள்ள ரயில்வே ஊழியர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுவார்கள். இதற்கான நடவடிக்கைகளும் நடந்துகொண்டிருக்கின்றன.

அடுத்ததாக, ரயில்வே வளர்ச்சி அதிகாரக்குழுமம் (ரயில்வே டெவலப்மெண்ட் அத்தாரிட்டி) என்னும் ஓர் அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பணி என்ன ?

இந்திய இரயில்வேயின் கீழ் உள்ள ரயில்வே பாதைகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுப்பது தான். இது முதலாவதாகும். இரண்டாவதாக, ரயில்வே பயணிகள் கட்டணங்கள் மற்றும் சரக்குக்கட்டணங்கள் உற்பத்திச் செலவினத்தின் அடிப்படையில் (cost basis) இனி அமைந்திடும். மானியங்கள் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுவிடும். தற்சமயம் ரயில்வே கட்டணங்களில் 47 சதவீத அளவிற்கு மானியத் தொகை இருக்கிறது.

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## அறிவியல் ‘கடவுள்’ தயாராகி விட்டார்!

மனிதர்கள் மூளை சிந்திக்கிறது; அந்த சிந்தனை தான் மனிதர்களையும் வாழ்க்கையையும் வழி நடத்தி வருகிறது. இந்த ‘மூளை’க்குள் மனித சமுகத்தை முன்னேற்றும் கருத்துகளும் மனித சமுகத்தை சீரழித்து பின்னுக்கு இழுத்துச் செல்லும் கருத்துகளும் பதிகின்றன. ஒரு மனிதன் சமுக வெளியிலிருந்து கண்களால், காதுகளால், பேச்சுகளால் பெறப்படும் கருத்துகளே மூளைக்குள் பதிவாகி அந்த மூளை அதன் வழியாக சிந்திக்கும் செயல்பாட்டை நிகழ்த்துகிறது.

‘வேதங்களை’ப் படித்து தங்களது மூளைக்குள் ஏற்றிக் கொண்டு அதை பிற மக்கள் கற்றுக் கொள்ளக் கூடாது என்று ‘எழுத்து வடிவத்தை’ நீண்டகாலத்துக்குத் தராமல் இருந்தார்கள் பார்ப்பனர்கள். ஏனைய மனிதப் பிறவிகளின் ‘மூளை’யை விட தங்கள் ‘மூளை’யே மேலானது; உயர்வானது. இது கடவுளால் தங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது என்று இன்று வரை கூறி வருகிறார்கள். அந்த ‘மூளை’யின் கற்பனையிலேயே கடவுள் உருவாக்கப் பட்டது; மதம் உருவாக்கப்பட்டது; மதத்தின் தத்துவங்கள் உருவாக்கப்பட்டன. ‘மனுதர்மம்’ என்ற மனித விரோத சட்டத்தை உருவாக்கியதும், ஹிட்லர், முசோலினி, கோட்சே என்ற ‘இனவெறியர்களை’ இயக்கியதும் இதே மூளைதான்.

இப்போது, உலகம் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கி விட்டது. அறிவியலின் வளர்ச்சி அதன் உச்சத்தை நோக்கி வேகமாக நகருகிறது. எந்திர மனிதர்களாக செயல்படும் ‘ரோபோ’க்களுக்கு மூளையைப் பொருத்தி, அதனை இயங்க வைத்தது அறிவியல். ‘ரோபோ’வின் மூளை நிர்ணயிக்கப்பட்ட கட்டளைகளுக்குள் தான் இயங்கும். இப்போது அறிவியல் மனிதர்களைப் போலவே ‘செயற்கை அறிவாற்றலை’ உருவாக்கும் அடுத்த நிலைக்கு வந்துவிட்டது.

இப்போது அமெரிக்காவின் ‘கணினி மய்யமான சிலிக்கான் பள்ளத்தாக்கு’ அறிவியல் மேதைகள் செயற்கை மூளையைக் கொண்ட ‘கடவுளை’ உருவாக்கிவிட்டனர். ஓட்டுனர்களே இல்லாமல் ஓடும் காரை வடிவமைத்த அந்தோணி லெவன் டோஸ்கி (Antony Levan Dowski) இந்த கடவுளையும் அந்தக் கடவுளை வழிபடும் ‘தேவாலயத்தை’யும் உருவாக்கி, ‘இதுதான் கடவுள்’ என்று அறிவித்திருக்கிறார். ‘இந்த செயற்கை அறிவூட்டப்பட்ட கடவுளை பிரார்த்தியுங்கள். அதுவே மனிதகுலத்தை உயர்த்தும்’ என்ற வேண்டுகோளையும் அவர் முன் வைத்திருக்கிறார். உண்மையில் சக்தி உள்ள ஒரு ‘கடவுள்’, சிலிக்கான் பள்ளத்தாக்கில் தான் மனிதனால் உலகின் முதன்முதலாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்றே கூறலாம்.

கற்பனையில் மனிதன் படைத்த கற்காலக் கடவுள்கள் சக்தியற்றவை; மனிதனின் அச்சத்தால் விடை கண்டுபிடிக்க முடியாத கேள்விகளால் அவனது கற்பனையில் உருவம் பெற்றவை. எனவேதான், ‘கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்’ என்றார் பெரியார். இப்போது செயற்கை அறிவூட்டப்பட்ட ஒரு அறிவியல் கடவுளாக உருவாக்கப்பட் டிருக்கிறது.

ஆனாலும், ‘கடவுள்’கள் அறிவியல் உலகத்துக்குத் தேவை தானா என்ற கேள்விகளும் இருக்கிறது. சிலிக்கான் பள்ளத்தாக்கு அறிவியல் மேதைகளான ஸ்டீபன் ஹாக்கிங் மற்றும் எலோன் மங்க் செயற்கை அறிவூட்டலில் ‘படைக்கப்பட்ட’ கடவுள். எதிர்காலத்தில் ஆபத்துகளை உருவாக்கிவிடலாம் என்று தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக தத்துவ இயலாளர் நிக் பாஸ்ட்ராமின் அறிவியலாளர்களால் ‘குரு’வாக மதிக்கப்படக் கூடியவர். மனிதகுல எதிர்காலம் குறித்து கடந்த பத்து ஆண்டுகளாக அவர் ஒரு கருத்தை முன் வைக்கிறார். “மனிதர்கள் மரணத்தைக் கடக்க வேண்டும்; மனிதர்கள் மூளையால் செய்யக்கூடிய பெரும்பாலான வேலைகள் செயற்கை மூளைக்கு மாற்றப்பட வேண்டும்” என்பதே அவர் வலியுறுத்தும் கருத்து.

செயற்கை அறிவாற்றலால் பழைய வேலைகள் ஒழியலாம். ஆனால் புதிய வேலைகள் உருவாகிக் கொண்டே இருக்கும் என்கிறார்கள் அறிவியலாளர்.

ஆக அறிவியல், மனிதன் அறிவாற்றல் கொண்ட ஒரு கடவுளை மதத்தை உருவாக்கிவிட்டான். நமது நாட்டு ‘பிறவி மூளைக் காரர்கள்’ வேத ஆகமம் பழக்க வழக்கங்களில் கை வைக்கக்கூடாது. கடவுளுக்கு சக்தியூட்டக்கூடியது எங்களின் வேத மந்திரம் எங்களுக்கு மட்டும்தான் கடவுளிடம் நெருங்கி அர்ச்சகராகும் உரிமை பிறவியிலேயே வழங்கப்பட்டது என்று இப்போதும் கூறு கிறார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகளும் ‘ஆமாம்; ஆமாம்’ என்கிறார்கள்.

கடவுளுக்கு செயற்கை அறிவு ஊட்டப்பட்டது; அறிவியல் உலகிலும் இத்தகைய கடவுளும் மதமும் தேவை தானா என்ற ஸ்டீபன் ஹாக்கிங் போன்றவர்கள் எழுப்பும் கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

# நீதிமன்றங்கள் கொசுக்களையும் ஒழிக்குமா?

**நீதிமன்றத்தில் வந்த கொசு வழக்கு! உச்சநீதிமன்றம் என்றாலே ‘உச்சிக்குடுமி’ மன்றம் தான் என்று தமிழ்நாட்டில் பாமர மக்கள் கூட கூறுவது வழக்கம்.**

அந்த உச்சநீதிமன்றம் தலையிடாத பிரச்சினையே இல்லை என்ற நிலை வந்து விட்டது. நாடாளுமன்றத்தையே கலைத்துவிட்டு நீதிபதிகளை மட்டும் தேர்தலில் போட்டியிட வைத்து அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றவர்களே நீதிபதி களாகலாம் என்ற முறை வந்து தொலைந்தால்கூட வரவேற்கலாம் போலிருக்கிறது.

‘உச்சிக் குடுமி’ மன்றத்தில் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு தலித் நீதிபதிகூட இல்லை. ஒரே ஒரு பெண் நீதிபதி மட்டும் இருக்கிறார். அவரும் தமிழ்நாட்டிலிருந்து சென்ற பானுமதி என்பவர் தான், இப்போது தலைமை நீதிபதியாக இருக்கும் ஓரிசா பார்ப் பனர். அவரது குடும்பத்திலிருந்து வந்துள்ள மூன்றாவது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி. ‘அவாளின்’ குடும்ப சொத்தாகி விட்டது.

அண்மையில் இந்த உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கு வந்தது; நீதிபதிகளை கடும் ஆத்திர மடையச் செய்த அந்த வழக்கை எத்தனை பேர் ஏடுகளில் படித்திருப்பார்களோ எனக்கு தெரியாது.

தனேஷ் பெஷ்தான் என்பவர் உச்சநீதி மன்றத்தில் கடந்த செப்.22ஆம் தேதி ஒரு வழக்கைப் போட்டார். ‘கொசுக்களை முழுமையாக ஒழிக்க வேண்டும்; கொசுக்களால் நோய் பரவுகிறது; இது தொடர்பாக அரசுக்கு உத்தரவிடவேண்டும்” என்பது தான் வழக்கு.

நீதிபதிகள் மதன் பி. லோகுர், தீபக் குப்தா இருவருக்கும் கோபம் வந்துவிட்டது.

“ஒவ்வொரு வீடாகச் சென்று அங்கு கொசுக்கள் இருக்கிறதா அல்லது ஈக்கள் இருக்கிறதா என்று கண்காணித்து எங்களால் உத்தரவு பிறப்பிக்க முடியாது. நாட்டிலுள்ள கொசுக்களை எல்லாம் அழிக்க வேண்டு மானால், அது **கடவுளால் மட்டுமே முடியும்**. அத்தகைய செயலை செய்து முடிக்கக நாங்கள் ஒன்றும் கடவுள் அல்ல” என்று கூறி மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்துவிட்டார்களாம்.

“கொசுக்களே; ஏன் இப்படி மக்களை வாட்டி வதைத்து, நோய்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறீர்கள்” என்று விளக்கம் கேட்டு, கொசுக் களுக்கு நோட்டீஸ் அனுப்ப முடியாத நிலையில் நீதிபதிகள் வேறு என்ன தான் செய்ய முடியும்?

அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு விசாரணையை மாற்றினாலும்கூட அவர்களுக்கும் ‘கொசு’ பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சட்டத்தில் இடமில்லை!

எனவேதான் நீதிபதிகள் ‘கொசுக்களை கடவுளால்தான் ஒழிக்க முடியும்’ என்ற ‘சட்ட பூர்வமான’ முடிவுக்கு வந்து விட்டார்கள். கொசுப் பிரச்சினை கடவுளிடம் போய்விட்ட நிலையில் அரசாங்கத்தால் மட்டும் என்ன செய்துவிட முடியும் என்று நினைப் பது நியாயம்தான். மிகவும் சிரமம்.

கடிக்கிற கொசு இந்துவா, முஸ்லீமா, கிறிஸ்துவமா என்று அரசாங்கத்தால் கண்டுபிடிக்கவும் முடியாது. முஸ்லீம் கொசு என்றால் பாகிஸ்தானிலிருந்து வந்ததுதான் என்று உறுதியாக முடிவுக்கு வரலாம்; இந்துவாக இருந்தால், ‘கொசு பாதுகாப்பு சட்டம்’ கொண்டு வந்து கொசுவை வதை செய்கிறவர் களுக்கு தண்டனை தரும் சட்டம் போடலாம், கொசு வதை செய்யும் இந்து விரோதிகளைக் கண்டிக்க கொசு பாதுகாப்புப் படையை உருவாக்கி - கொசுவை நசுக்கு கிறவர்களை ‘கொசுப் பாதுகாப்புப் படை’ அடித்து, உதைத்து, ‘துவேசம்’ செய்யலாம். ‘இந்து இராஜ்யத்தில்’ இந்த அடிப்படை உரிமைகளை விரும்புகிற எவரும் கையில் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கொசுவை ஒழிக்க கடவுளால் மட்டுமே முடியும் என்ற நிலையில் அரசாங்கமும் வேறு என்னதான் செய்ய முடியும்? இவ்வளவு குழப்பங்களும் பிரச்சினைகளும் கொண்டிருக்கிறது ‘கொசு’ பிரச்சினை. ஆனாலும், நீதிபதிகள் மீது நமக்கு வருத்தம் உண்டு. கடவுளால் மட்டுமே கொசுக்களை ஒழிக்க முடியும் என்று கூறி ‘இந்து’க்களின் உணர்வைப் புண்படுத்தி விட்டார்களே என்ற வருத்தம்தான்.

“கொசுக்களை ஒழிக்கும் சக்தி இருந்தும், கடவுள் ஏன் இந்த கொசுக்களை ஒழிக்காமல் இருக்கிறார்? அல்லது இந்த ‘உயிர்வதை’ செய்யும் கொசுக்களை கடவுள் படைக்கா மலேயே இருந்திருக்கக் கூடாதா?” - என்று அறிவியலாளர்கள் கேள்வி கேட்கும் நிலையை நீதிபதிகள் உருவாக்கி விட்டார்களே என்பதுதான் நமது கவலை!

‘சங்பரிவார்’களின் மனம் எவ்வளவு ‘புண்படும்’?

சரி போகட்டும்! இனி நீதிபதிகள் இந்த தீர்ப்பை எவரும் எதிர்த்து கேள்விகள் கேட்கக் கூடாது; சட்டம் ஒழுங்கு பாதிக்க அனுமதிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றம் தடாலடியாக ஒரு உத்தரவைப் போட்டு விடுவதுதான் நாட்டுக்கு நல்லது; கொசுக்களுக்கும் நல்லது!

**– கோடங்குடி மாரிமுத்து**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகை யாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896

# சென்னை தோழர்களின் இரண்டாம் கட்ட பரப்புரை: மக்கள் பேராதரவு

*இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனித் தன்மை காப்போம்; சமூக நீதி சமத்துவப் பரப்புரைப் பயணம், சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 23.9.2017 முதல் 28.9.2017 வரை நடைபெற்றது. ஒரு நாளைக்கு நான்கு இடங்களில் என்று நான்கு நாள் இந்த பரப்புரை நடைபெற்றது.*

23.9.2017 அன்று காலை 10 மணியளவில் குமணன்சாவடி நிறுத்தம் அருகில் துவக்கப்பட்ட பரப்புரைப் பயணத்தில் பயண துண்டறிக்கை வழங்கிய தோழர்களிடம் சிறீதர் என்பவர் இரண்டு லிட்டர் பெட்ரோல் வாங்கிக் கொடுத்தார். சென்னை மொபைல் நிறுவனம் சார்பில் தண்ணீர் பாட்டில்கள் தோழர்களுக்கு வழங்கினர். பிரகாசு என்பவர் ரூ.500 நன்கொடை வழங்கியதோடு, தங்கள் பகுதியில் பரப்புரை செய்தால் அதற்கான செலவை நானே ஏற்றுக் கொள்வதாக கூறினார். இதனைத் தொடர்ந்து காலை 11.30 மணியளவில் போரூர் நான்கு முனை சாலையில் பரப்புரை நடைபெற்றது. அங்கு நடைபெற்ற பரப்புரையைப் பார்த்துப் பெயர் சொல்ல விரும்பாத ஒருவர் ரூ.500 நன் கொடை வழங்கினார். கரு. அண்ணாமலை பங்கேற்று ஆதரவு தெரிவித்தார். தோழர் களுக்கு மதிய உணவு கழகத் தோழர் துரைராஜ் ஏற்பாடு செய்தார்.

மாலை 3 மணியளவில் இராமாபுரம் அரசமரம் அருகில் பரப்புரை நடைபெற்றது. இந்நிகழ்வில் இராமாபுரம் சுப்ரமணி பங்கேற்றார். கழக வழக்கறிஞர் துரை அருண் உரை நிகழ்த்தினார். உளவுத் துறை அதிகாரி கருத்திருமன் தோழர்களுக்கு தேநீர் ஏற்பாடு செய்தார். தொடர்ந்து கழக செயல்பாடு களுக்கு உதவி வந்த அவர், செப்டம்பர் 30ஆம் தேதியுடன் பணி ஓய்வு பெற்றார். தபசி குமரன் தலைமையில் அவர்களுக்கு தோழர்கள் வாழ்த்து தெரிவித்தனர். பின் மாலை 6 மணியளவில் ஆதம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகில் பரப்புரை நடைபெற்றது. வழக்கறிஞர் துரை அருண் தலைமையில் தி.மு.க. விடுதலைச் சிறுத்தைகள், தி.க. உள்ளிட்ட தோழர்கள் பயண குழுவிற்கு வரவேற்பு அளித்தனர். குணாளன் (தி.மு.க.), சுதன்லீ (தி.க.), சீராளன் (வி.சி.க.), வழக்கறிஞர் துரை அருண், கு. அன்பு தனசேகர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். குகா நன்றி கூறினார். துரை அருண் இரவு உணவுக்கு ஏற்பாடு செய்தார். இந்தியன் வங்கி ஊழியர் திருமா வளவன் ரூ.500 நன்கொடை வழங்கினார்.

24.9.2017 அன்று காலை 10 மணியளவில் மேடவாக்கம் குமரன் தியேட்டர் அருகில் பரப்புரை நடைபெற்றது. போஸ் (தி.மு.க.) ரூ.500, சிவக்குமார் ரூ.500 நன்கொடை தந்தனர். விழுப்புரம் மாவட்ட தோழர்கள் ஊமை துரை, குமரேசன், தங்கராசு பங்கேற்றனர். தொடர்ந்து 12.30 மணியளவில் பள்ளிக்கரனை மார்க்கெட் அருகில் பரப்புரை நடைபெற்றது. தம்பி மண்டேலா உரை யாற்றினார். மதிய உணவுக்குப் பிறகு மாலை 3 மணியளவில் மடிப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே நடைபெற்ற பரப்புரையில் வழக்கறிஞர் துரை அருண் உரையாற்றினார். மாலை 5 மணி யளவில் வேளச்சேரி 100 அடி சாலையில் பரப்புரை நடைபெற்றது. தலைமை குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், இலட்சுமணன், செந்தில் ஆகியோர் பங்கேற்றனர்.

25.9.2017 அன்று காலை 10 மணியளவில் ஈஞ்சம்பாக்கம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடைபெற்றது. அரசு அடக்கு முறைக்கு எதிரான கூட்டமைப்பு ஒருங் கிணைப்பாளர் பார்த்திபன் உரையாற்றினார். 12 மணியளவில் கொட்டிவாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் பரப்புரை நடைபெற்றது. பார்த்திபன் உரை நிகழ்த்தினார். பெசண்ட் நகர் கழகத் தோழர்கள் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்தனர்.

மாலை 4 மணியளவில் திருவான்மியூர் தெப்பக் குளம் அருகில் நடைபெற்ற பரப்புரை யில் காஞ்சி மாவட்ட பொருப்பாளர் இரவி பாரதி உரையாற்றினார். மாலை 6 மணியளவில் திருவான்மியூர் லட்சுமிபுரம் காந்தி சிலை அருகில் நடைபெற்றது. இரவி பரதி உரை நிகழ்த்தினார்.

26.9.2017 அன்று காலை 10.30 மணியளவில் பெசண்ட் நகர் எல்லையப்பன் கோயில் அருகில் நடைபெற்ற பரப்புரையைப் பார்த்த ஒருவர் ரூ.2000 நன்கொடை வழங்கினார். காலை 11.30 மணியளவில் நடேசன் சாலை, இலாயிட்ஸ் சாலை சந்திப்பில் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு மாலை 3 மணியளவில் திருவல்லிக்கேணி நெடுஞ் சாலை, பார்த்தசாரதி கோயில் ஆர்ட்ஸ் அருகில் நடைபெற்றது. அன்று நடந்த மூன்று இடங்களிலும் சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி ஒருங்கிணைப்பாளர் செயநேசன் உரையாற்றினார். மாலை 5 மணியளவில் சென்னை மயிலாப்பூர் தோழர்கள் ஏற்பாடு செய்த பெரியார் பிறந்த நாள் விழா மற்றும் பரப்புரைப் பயண நிறைவு விழா பொதுக் கூட்டத்தில் பயணக் குழுவினர் வந்தடைந்தனர்.

பயணத்தின் பரப்புரை விரட்டுக் கலைக் குழுவைச் சார்ந்த குபேந்திரன், கார்மேகம், மதன் ஆகியோர் பறை இசையுடன் துவங்கியது. தோழர்கள் கார்த்திக், பெரியார் யுவராஜ், மதன் சாதி ஒழிப்பு மற்றும் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர். அருண் பரப்புரை வாகனத்தை ஓட்டினார். விவேக் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்தார். விழுப்புரம் அய்யனார், சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி பயணத்தை தலைமையேற்று நடத்தினர். இந்த நான்கு நாள் பயணத்தில் 5000 துண்டறிக்கை மக்களிடையே வழங்கப் பட்டன. பொது மக்கள் தானாகவே முன் வந்து துண்டறிக்கையை வாங்கிப் படித்தது தோழர் களுக்கு உற்சாகத்தைத் தந்தது. வழக்கம் போல் சிறு வியாபாரிகளும், சாலையோரத்தில் உள்ள கடை வியாபாரிகளிடம் நல்ல ஆதரவு இருந்தது.

இந்த நான்கு நாள் பயணத்தில் கீழ்க்கண்ட தோழர்கள் பங்கேற்றனர்: ராஜேஷ், ராஜா, தமிழ்தாசன், பிரகாஷ், ராஜேஷ், காவை கனி, காவை அஜித், சுரேந்தர், விப்பூன், எட்வின் பிரபாகரன், இலட்சுமணன், அருண், ராஜு, தனஞ்செழியன், முகேஷ், பாரி சிவா, மா. தேன்ராஜ்.

**செய்தி தொகுப்பு : அய்யனார்**

## ‘செயற்கை அறிவூட்டல்’ எனும் அறிவியல் புரட்சி

இயந்திரங்களுக்கு ஊட்டப்படும் செயற்கையான அறிவானது, மனிதர்களே இனி இந்த வேலைகளுக்குத் தேவையில்லை என்ற அளவுக்குச் செயல்படும் நிலையை ‘சூப்பர்-இன்டலிஜென்ஸ்’ எனலாம். பல ஆண்டுகளாக விவாதிக்கப்படும் இந்தக் கருப்பொருள், சமீபத்தில் சமூக வலைதளத்தில் டெஸ்லா நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எலான் மஸ்க், ஃபேஸ்புக் நிறுவனத் தலைவர் மார்க் ஸக்கர்பெர்க் இடையில் சச்சரவை ஏற்படுத்தி விட்டது. “செயற்கை அறிவாற்றலை உருவாக்குவதில் முன்னேற்றம் ஏற்படுவது நல்லது, அது கார் விபத்துகளையும், நோய் ஏற்படுவதையும் தடுத்துவிடும்” என்றார் ஸக்கர்பெர்க். “செயற்கை அறிவாற்றலை முறைப்படுத்தத் தவறினால் பூமியை இயந்திரங்களே தங்களுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளக்கூடிய அழிவுக் காலம் ஆரம்பித்து விடலாம்” என்று மஸ்க் எச்சரித்தார்.

செயற்கை அறிவு தொடர்பாக அறிவியல் புனை கதைகளில் சாத்தியம் இருப்பதாக எழுதப்பட்டதைத் தவிர, இந்த விவாதத்துக்கு முன்னோடியாக வரலாறு ஏதும் உண்டா?

சிலிக்கான் பள்ளத்தாக்கு ஜாம்பவான்களான மஸ்க் முதல் பில் கேட்ஸ் மற்றும் இயற்பியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் உள்ளிட்டோர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தத்துவ அறிஞர் நிக் பாஸ்ட்ராமின் ரசிகர்கள்தான். மனிதர்கள் புறவய நிலையைக் கடக்கும் ஆற்றல் உள்ளவர்களாக மாற வேண்டும் அல்லது மடிய வேண்டும் என்று எதிர்காலம் குறித்து அவர் கடந்த பத்தாண்டுகளாக எச்சரித்துவருகிறார். புறவய நிலையைக் கடப்பது என்பது மரணத்தை வெற்றிகொள்வது. மனிதர்கள் மூளையால் செய்யக்கூடிய பெரும்பாலான வேலைகளை செயற்கை மூளைகளுக்கு மாற்றியாக வேண்டும். எலான் மஸ்கின் வாதங்களில் பெரும்பாலானவை பாஸ்ட்ராமின் கருத்துகளிலிருந்து உருவானவை. பாஸ்ட்ராமின் எதிர்காலம் பற்றிய கணிப்புகள் ஓரளவுக்கு நம்பக்கூடியவை.

அவரவர் கருதும் காலக்கெடுவைப் பொறுத்தது அது. மனிதர்கள் செய்யக்கூடிய வேலைகளை செயற்கை அறிவாற்றல் பெற்ற இயந்திரங்கள் எடுத்துக் கொண்டுவிடும். கடைகளில் விற்பனையை இயந்திர மனிதர்கள் கவனிப்பார்கள். தானாக ஓடும் கார்களுக்கு ஓட்டுநர்கள் தேவைப்பட மாட்டார்கள். செயற்கை அறிவாற்றலை வரவேற்பவர்கள், பழைய வேலைகள்தான் ஒழியுமே தவிர, புதிய வேலைகள் உருவா கிக்கொண்டே இருக்கும் என்கிறார்கள்.



செயற்கை அறிவாற்றல் தொடர்பான ஆராய்ச்சி களை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்?

இதற்கு யாரிடமும் விடை இல்லை. செயற்கை அறிவாற்றலைப் படிப்படியாக மேம்படுத்தும் ஒவ்வொரு நடவடிக்கையுமே பெரிய சவால்தான் என்று ‘தி நியூயார்க்கர்’ இதழுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார் ஜியாஃப்ரி ஹின்டன். மனித மூளை - நரம்புமண்டலத்தை அடிப்படையாகக் கொண்ட கணினியை உருவாக்குபவர்களில் ஹின்டனும் ஒருவர். அணுவுக்குப் பேரழிவையும் உயிரிழப்பையும் ஏற்படுத்தும் ஆற்றல் இருக்கிறது என்று தெரிந்த பிறகும், 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அத்துறையில் அடிப்படை ஆராய்ச்சியை மேற்கொள்வது தொடர்ந்தது. ஸ்டெம் செல் (குருத்தணுக்கள்) ஆராய்ச்சியானது முளைவிடும் உயிரைப் பறித்துவிடும் என்ற அச்சத்தில் அரசால் தொடக்கத்தில் தடை செய்யப்பட்டது. மனித மூளையைப் போலச் செயல்பட ‘செமி-கண்டக்டர்’களை இணைக்கும் கணினி விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளை இனி சர்வாதிகாரிகளால்கூடத் தடுக்க முடியாது!

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## எச்சரிக்கின்றன ஆய்வுகள்

# மரபணு நோய்களை உருவாக்குகின்றன ஒரே ஜாதித் திருமணங்கள்

சமீபத்தில் இந்திய மற்றும் அமெரிக்க மரபணு ஆய்வாளர்கள் ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகச் சொந்த சாதிக்குள்ளே திருமணம் செய்யும் போக்கின் விளைவாகப் பல சமூகங்களிடையே பல்வேறு மரபணு பரம்பரை நோய்கள் பல்கிப் பெருகியுள்ளன என்று அந்த ஆய்வு எச்சரிக்கை செய்கிறது.

குறிப்பிட்ட சாதிச் சமூகத்தில் மரபணு சார்ந்த பரம்பரை நோய்கள் இயல்பைவிட கூடுதலாக இருக்கின்றன எனவும் உள்ளபடியே அகமண உறவு காரணமாகவே இவை உருவாயின எனவும் ஹைதராபாதில் உள்ள சி.சி.எம்.பி. ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த ஆய்வளர்கள் நிறுவியுள்ளனர். சாதி என்பது சமூக நோய் மட்டுமல்ல சமூகத்தில் மரபணு நோயையும் கூடுதலாக்கிப் பொதுச் சுகாதார ஆபத்தையும் ஏற்படுத்துகிறது என்று சுட்டுகிறது இந்த ஆய்வு.

நெருங்கிய உறவு முறைக்குள் திருமணம் செய்வதால் பிறக்கும் குழந்தைக்கு ஏற்படும் மரபியல் நோய் ஆபத்து குறித்து நாம் ஏற்கெனவே அறிவோம். இந்த ஆய்வு, சாதிக்குள் நடக்கும் அகமண திருமணமும் இவ்வாறே மரபியல் நோய்களை ஏற்படுத்துகிறது என கூறுகிறது. சாதி, குலம், பண்பாடு அல்லது மொழி என்ற பாகுபாட்டுப் பிரிவின் அடிப்படையில் திருமணங்கள் அமைந்து அகமண முறை நடைமுறைப்படுத்தும் நிலையில் அந்த மக்கள் பிரிவிடம் மரபியல் வேறுபாடுகள் குறைந்து போகின்றன. 'ஏழு தலைமுறை' கடந்து திருமணம் என்று கோத்திரம் பார்த்துத் திருமணம் செய்வதும் பலன் தராது. **ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அகமண முறை நீடிக்கும் நிலையில் பல்வேறு கோத்திரங்களுக்குள்ளும் மரபியல் வேறுபாடுகள் அழிந்துபோகின்றன.**

பண்டைய காலத்தில் திடும் திடுமென கொள்ளை நோய்கள் பரவி, கொத்துக்கொத்தாக மக்கள் மடிந்து போவர்கள். அவ்வாறு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவில் இருந்தவர்களில் பலர் திடீரென மடிந்துபோனால் அந்தக் குழுவின் மரபியல் பரவல் சுருங்கிவிடும். அந்தக் குழு, அகமண முறையைக் கடைப் பிடிக்கும் கலாச்சாரத்தைக் கொண்டிருந்தால் அதன் பின்னர் ஒடுங்கிய மரபியல் பரவலே அந்தக் குழுவில் அமைந்து போகும். அதேபோல ஒரு குழுவில் இருந்த சிலர் பிணக்கம் காரணமாக அல்லது பிழைப்பு தேடித் தனியாக வேறு ஒரு குழுவை ஏற்படுத்திப் பிரிந்து சென்று தொலைவில் வேறு ஒரு நிலப்பகுதியில் குடிபுகுந்து வாழத் தொடங்கி அவர்களும் தங்களுக்குள் அகமண முறையைப் பின்பற்றினாலும் அந்தக் குழுவிடமும் மரபியல் பரவல் குறைந்துபோகும். மக்கள் தொகை மரபியல் ஆய்வில் இவை முறையே மக்கள்தொகை முட்டுப்பாடு (population bottleneck) மற்றும் நிறுவன நிகழ்வு (founder event) கோட்பாடு என அழைக்கப்படுகிறது.

அகமண முறையைப் பின்பற்றினால் மக்கள்தொகை முட்டுப்பாடு மற்றும் நிறுவன நிகழ்வின் தாக்கம் தலைமுறை தலைமுறையாக தொடரும்; காலப்போக்கில் மரபியல் பரவல் மேலும் சுருங்கும். அகமண முறையின் காரணமாக மரபியல் பரவல் செழிக்க முடியாமல் தேங்கிய நிலைக்கு உள்ளாகும் போது ஒடுங்கு-மரபணுப் பிறழ்ச்சி வழி ஏற்படும் பரம்பரை நோய்கள் (recessive genetic diseases) கூடும். மரபியல் பரவல் ஒடுங்கினால் அது மரபியல் நோய்களுக்கு இட்டுச்செல்லும்.

இந்தியா, வங்கதேசம், இலங்கை, நேபாளத்தைச் சார்ந்த மானுடவியல் பார்வையில் தனித் தனிக் குழுவாக அகமண முறை கொண்டு வாழும் 275 சாதிகளைச் சார்ந்த 2,800 நபர்களின் மரபணு தொகுதிகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்தக் குழுக்களில் நிறுவவன நிகழ்வின் தாக்கம் தூக்கலாக இருந்தது புலப்பட்டது. இன்று பல லட்சம் மக்கள்தொகை கொண்டதாகப் பல சாதிகள் இருந்தபோதிலும், ஆயிரம் தலைமுறைக்கு முன்னர் வாழ்ந்த நிறுவன நிகழ்வின் தாக்கம் காரணமாக நீண்ட மரபணுத் தொடர்கள், அகமண முறையின் தொடர்ச்சியாக, குறிப்பிட்ட குழுவில் எல்லோரிடமும் பரவியிருப்பது இந்த ஆய்வில் வெளிப்பட்டது.

எனவே, **மரபணு நோயைத் தூண்டும் மரபணு தாய் தந்தை இருவரிடமும் அமைந்து குழந்தைக்குப் பரவும் வாய்ப்பு அதிகரிக்கிறது.** இதன் தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட மரபணு நோய் அந்தச் சாதியில் பரம்பரை நோயாக வளர்ந்துவிடுகிறது.

ஹைதராபாதில் உள்ள சி.சி.எம்.பி-சி.எஸ்.ஐ.ஆர். (CCMB-CSIR) எனும் ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த குமாரசாமி தங்கராஜூம் ஹார்வர்டு மருத்துவக் கல்லூரியை சார்ந்த டேவிட் ரெய்ச்சும் இணைந்து தலைமையேற்று நடத்திய இந்த ஆய்வில் ஜம்மு காஷ்மீரைச் சார்ந்த குஜ்ஜர் சமுதாயம், உத்தர பிரதேசத்தைச் சார்ந்த பனியா, தெலங்கானா பகுதியின் ரெட்டி சமூகம், தமிழகத்தில் பார்ப்பனர்கள், கள்ளர்கள், அருந்ததியர்கள், புதுச்சேரியை சார்ந்த யாதவர்கள் முதலானோர் இடையே நிறுவன நிகழ்வின் தாக்கம் தூக்கலாக இருக்கிறது என்று இந்த ஆய்வு கூறுகிறது.

முப்பது லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்தாலும் அகமண முறையின் காரணமாக வலுபெற்ற நிறுவன நிகழ்வு தொடர்ச்சியாக தெலுங்கானா வைசிய சமுதாயத்தில் 'பிசிஎச்ஈ' (BChE - butyrylcholinesterase) எனும் அரிய மரபணு நோய் மற்ற சமுதாயங்களைவிட நூறு மடங்கு கூடுதலாக இருக்கிறது என்று சுட்டும் இந்த ஆய்வு, சாதி அமைப்பின் வேறு ஒரு அவல முகத்தை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. 'பிசிஎச்ஈ' மரபணு நோய் காரணமாக ஏற்படும் வளர்சிதைமாற்றச் சீர்கேடுகளின் காரணமாக இந்த நோய் கொண்டிருப்பவர்களுக்கு அறுவை சிகிச்சைகளின்போது வலி தெரியாமல் இருப்பதற்குத் தரப்படும் மயக்க மருந்து மீது ஒவ்வாமை ஏற்படும்.

எனவே, இவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வது மிகவும் கடினம். எந்த ஒடுங்கு மரபியல் நோய் எந்தெந்த சாதியில் மிகுந்துள்ளது என்பதைக் கண்டுபிடித்து அதற்குக் காரணமான ஒடுங்கு மரபணுவை இனம்காண்பது இந்த ஆய்வின் அடுத்த படிநிலை என்று தங்கராஜ் கூறுகிறார். தொற்றுநோய்களால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துவரும் தற்போதைய காலகட்டத்தில் மரபணு நோய்களால் ஏற்படும் இறப்பு விகிதம் அதிகரிக்கும் என்றும், ஆகவே தங்களின் ஆய்வு பொதுச் சுகாதார மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவும் என்கிறார்.

இப்படிப் பல்வேறு அறிவியல் ஆய்வுகளும் தெளிவாகக் கூறிவிட்டன. எனினும் நம் சமூகமோ இன்னமும் சாதியை இறுக்கமாகப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது!

**நன்றி: 'தமிழ் இந்து'**

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

எனவே அரசின் புதிய கட்டணங்கள் செயல் படுத்தப்பட்டால் இப்போதுள்ள கட்டணங்கள் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகும். இவை மக்கள் மீதான சுமைகளாகும். இவர்கள் ஆட்சிக்கு வந்தபின்னர், 'இந்தியாவின் உற்பத்தி செய்வதற்குப்' பதிலாக, இந்தியாவை முற்றிலுமாக அழித்திடும் வேலையில் இறங்கி இருக்கிறார்கள். இது மிகவும் மோசமான தேச விரோத நடவடிக்கையாகும். இவை அனைத்தையும் தவிர்த்திட வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இல்லையேல், நாட்டு மக்கள் தங்கள் ஒற்றுமை பலத்தின் மூலமாக இந்த நாசகர நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவார்கள். அரசின் இந்த ஊழியர் விரோத, தேச விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, ஏற்கெனவே ரயில்வே ஊழியர்களும், தொழிற் சங்கங்களும் போராட்டப்பாதையில் அணிதிரளத் தொடங்கிவிட்டார்கள் என்றார், தபன்சென்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 9th November 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN